# நூலகவியல் மற்றும் தகவல் சேவைகள் டிப்ளோமா கற்கை நெறி

## மாணவர் கைந்நூல் 2021



பேராதனைப் பல்கலைக்கழக
தொடர் தொலைக்கல்வி நிலையம்

# நூலகவியல் மற்றும் தகவல் சேவைகள்

# டிப்ளோமா கற்கை நெறி

## மாணவர் கையேடு 2021

பேராதனைப் பல்கலைக்கழக
தொடர் தொலைக்கல்வி நிலையம்

# உள்ளடக்கம்

**பக்க எண்**


பேராதனைப் பல்கலைக்கழகத்தின் வரலாறு……………………………..………………………01

பேராதனைப் பல்கலைக்கழக தொடர் தொலைக்கல்வி நிலையத்தின் வரலாறு…………..……..02

தொடர் தொலைக்கல்வி நிலையத்தின் நிர்வாக கட்டமைப்பு வரைபடம்…………………..…….03

கற்கை நெறி அறிமுகம்……………………………………………………………..………05

அனுமதித் தகைமைகள்……………………………………………………………………..06

நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்கள்…………………………………….…………….……………07

கற்றல் விளைவுகள்……………………………………………………….……………....07

டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டத்தின் அமைப்பு……………………………………….……….………08

கற்பித்தல் மொழிகள்……………………………………………...……………………08

மாணவர் பதிவு………………………………………………………………….…...…….09

மாணவர் பதிவினைப் புதுப்பித்தல்……………………………..…………………………09

மாணவர் பதிவினைப் பிற்போடல்……………………………………………………………....09

இந்நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து நீங்குதல்……………………………………………..…………09

மாணவர் வரவு…………………………………………………………………...…………..10

மாணவர் மதிப்பீடுகள்…………………………………………………………………………...10

விசேட மற்றும் திறமை சித்திகள் (Distinction and Merit Passes)………………………………11

வேண்டுகோள்களும் முறையீடுகளும்…………………………………………………...…11

ஆசிரியர் குழு…………………………………………………………………………………..12

கற்கை பாடநெறிகள்……………………………………………………………………...…13

தொடர்புகள் பற்றிய விபரங்கள்……………………………………………………..………17

## உபவேந்தரின் செய்தி



பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தொடர் தொலைக்கல்வி நிலையத்தினால் (CDCE) நடாத்தப்படும் நூலகவியல் மற்றும் தகவல் சேவைகள் டிப்ளோமா கற்கை நெறியை தொடரவுள்ள புதிய மாணவர்களாகிய உங்களை அன்புடன் வரவேற்கின்றேன்.

ஆரம்பகாலம் முதல் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தொடர் தொலைக்கல்வி நிலையமானது நாட்டிற்குத் தேவையான (CDCE) திறமைமிக்க, தரமான வெளிவாரி பட்டதாரிகளை உருவாக்கி வருகின்றது. பேராதனைப் பல்கலைக்கழகத்தில் வெளிவாரி டிப்ளோமா கற்கை நெறியினை தொடரும் மாணவர்களாகிய உங்களுக்கு சர்வதேச தரத்திலான கல்வித் தகைமையை பெறும் வாய்ப்பு கிடைக்கவுள்ளதென்பதை அறியத் தருகின்றேன்.

ஒன்பது பீடங்களை உள்ளடக்கி பரந்த அளவிலான விடயங்களைக் கற்பிக்கும் பேராதனைப் பல்கலைக்கழகமானது தேசத்தின் தலைசிறந்த பல்கலைக்கழகமாகும். அதிசிறந்த விரிவுரையாளர்ளைக் கொண்ட பேராதனைப் பல்கலைக்கழகமானது அதற்கு மேலதிகமாக கல்விசார் நடவடிக்கைகளுக்கு மிக உகந்ததும் தன்னிகரற்றதுமான அழகிய சூழலைக் கொண்டதாக அமையப்பெற்றுள்ளது. ஏனைய பல்கலைக்கழகங்களுடன் ஒப்பிடுகையில் எமது பல்கலைக்கழகமானது மாணவர்களுக்கான மிகுந்த வளங்களையும் அதிகளவான வாய்ப்புக்களையும் கொண்டுள்ளது.

உங்கள் கல்விக் குறிக்கோள்களை அடைந்து சமூகத்தில் சமநிலை வகிக்கும், பொறுப்புள்ள மற்றும் பயன்மிக்க பிரஜைகளாக உருவாவதற்கு இவ்வரிய வாய்ப்புக்களைப் பயன்படுத்துவீர்கள் என நான் நம்புகிறேன். நீங்கள் கல்வி பயிலும் கால கட்டமானது இனிய நினைவுகளும் அனுபவங்களும் கொண்டதாக அமைய வேண்டுமென்று மனதார வாழ்த்துகிறேன்.

பேராசிரியர் எம். டி. லமாவண்ஸ
உபவேந்தர்
பேராதனைப் பல்கலைக்கழகம்

## கலைப் பீட பீடாதிபதியின் ஆசிச் செய்தி



அன்புமிக்க மாணவ மாணவிகளே,

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தொடர் தொலைக்கல்வி நிலையத்தினால் நடாத்தப்படும் நூலகவியல் மற்றும் தகவல் சேவைகள் டிப்ளோமா நிகழ்ச்சித் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்ட முதல் தொகுதி மாணவர்களாகிய உங்களுக்கு முதற்கண் எனது வாழ்த்துதல்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த டிப்ளோமா நிகழ்ச்சித் திட்டமானது பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கலைப் பீட கலைத் துறை சார்ந்த கற்கைகள் வாரியத்தின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்படுகின்றது. எனவே, கலைப் பீட பீடாதிபதி என்கின்ற வகையில் உங்கள் அனைவரையும் 2021/2022 கல்வியாண்டுக்கு அன்புடன் வரவேற்கின்றேன். இலங்கைப் பல்கலைக்கழக தரப்படுத்தல் வரிசையில் முதற் தர பல்கலைக்கழகமாகத் திகழும் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் டிப்ளோமா சான்றிதழ் பெறும் பாக்கியம் உங்களுக்கு கிடைக்கப்பெற்றுள்ளது.

நூலகவியல் மற்றும் நூலக சேவைகள் டிப்ளோமா கற்கை நெறியானது பரிணமித்துக் கொண்டிருக்கும் தகவல் சமூகத்தின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. எனவே, இக்கற்கை நெறியானது நூலகவியல் மற்றும் தகவல் சேவைகள் துறையில் தொழில் வாய்ப்புக்களைத் தேடுவோர்க்கு தேசிய மற்றும் சர்வதேச தொழிற் சந்தையில் உரிய சந்தர்ப்பங்களை உருவாக்கும் என்பது எனது அபிப்பிராயமாகும். உங்கள் தொழில் ரீதியான அபிலாசைகளை மேம்படுத்த இந்நிகழ்ச்சித் திட்டம் உருதுணையாக அமைய உள்ளது.

உங்கள் கல்வி நடவடிக்கைகளில் வெற்றிகரமாக ஈடுபடத் தேவையான முக்கிய தகவல்களை இக்கையேடு கொண்டுள்ளது. தொடர் தொலைக் கல்வி நிலையத்தைப் (CDCE) பற்றியும், இந்நிகழ்ச்சித் திட்டத்தைப் பற்றியும், கற்கை நெறி அமைப்பு பற்றியும், ஆசிரியர் குழு பற்றியும், கற்கை நெறி தொடர்பான சட்ட விதிமுறைகள் பற்றியும் இக்கையேடானது உங்களுக்கு வழிகாட்டுதல்களை வழங்குகின்றது.

மிகவும் திறமை வாய்ந்த ஆசிரியர்களை உள்ளடக்கிய குழுவொன்று இக்கற்கை நெறியினை நடாத்தவுள்ளது. மேலும், கற்றல் நடவடிக்கைகளை மேற்கொள்ள உகந்த சூழல் இங்கு அமையப்பெற்றுள்ளது. எமது பல்கலைக்கழகம் வழங்கும் இக்கற்கை நெறி மூலமாக நீங்கள் உச்ச பயனை அடைவீர்கள் என நான் எதிர்பார்க்கின்றேன். எமது பல்கலைக்கழகத்தினதும் தொடர் தொலைக் கல்வி நிலையத்தினது (CDCE) சாதகமான கற்றல் சூழல் உங்கள் அறிவு, திறன், மனப்பாங்கு போன்றவற்றின் கொள்ளளவினை மேம்படுத்தி எதிர்காலத்தில் நாட்டின் நலனுக்காக பணி செய்ய உங்களை ஆயத்தப்படுத்தும் என நான் உறுதியாக நம்புகிறேன். உங்கள் கல்வி நடவடிக்கைகள் வெற்றி பெற வாழ்த்துகிறேன்.

கலாநிதி இ. எம். பி. சி. எஸ். ஏக்கநாயக்க
கலைப் பீட பீடாதிபதி

## தொடர் தொலைக் கல்வி நிலைய இயக்குனரின் ஆசிச் செய்தி



அன்புக்குரிய மாணவ மாணவியரே,

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தொடர் தொலைக் கல்வி நிலைய இயக்குனர் என்ற வகையில் இந்த ஆசிச் செய்தியை வழங்குவதில் நான் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். குறிப்பாக, நூலகவியல் மற்றும் தகவல் சேவைகள் டிப்ளோமா நிகழ்ச்சித் திட்டத்தின் (2021/2022) முதல் தொகுதி மாணவர்களாகிய உங்களை எமது பல்கலைக்கழகத்திற்கும் எமது நிலையத்திற்கும் அன்புடன் வரவேற்கின்றேன்.

தொலைக் கல்வி நிகழ்ச்சித் திட்டமாக நூலகவியல் மற்றும் தகவல் சேவைகள் டிப்ளோமா கற்கை நெறியினை இயற்கை வனப்பு மிக்க இலங்கையின் முதன்மை உயர் கல்வி நிறுவனத்தில் பயிலும் அரிய வாய்ப்பு கிடைத்தமைக் குறித்து நீங்கள் பெருமிதம் கொள்ள வேண்டும். இலங்கையின் மிகப்பெரிய கல்விசார் நூலகம் பேராதனைப் பல்கலைக்கழகத்திலேயே அமைந்துள்ளது. எனவே, பேராதனைப் பல்கலைக்கழகமும் நூலகவியல் துறையும் வேறுபடுத்த முடியாதவையாக உள்ளன. பேராதனைப் பல்கலைக்கழக நூலகமானது பிரமாண்டமான நூல் சேகரிப்புகள், விசேட சேகரிப்புகள், பண்டைய இலங்கைச் சமூகம் பற்றியும் பல விடயங்களையும் உள்ளடக்கிய ஓலைச் சுவடிகள் போன்றவற்றைக் கொண்ட பாரியதொரு நூலகமாகும்.

பரிணமிக்கும் தகவல் சமூகத்தின் தற்போதைய தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் இந்த நூலகவியல் மற்றும் தகவல் சேவைகள் டிப்ளோமா நிகழ்ச்சித் திட்டம் திட்டமிடப்பட்டுள்ளது. எனவே, உங்கள் தொழில்சார் அபிலாசைகளை மேம்படுத்துவதற்குப் பொருத்தமான கல்விக்கழகத்தினை நீங்கள் தெரிவு செய்துள்ளீர்கள். அவ்வகையில், நூலக மற்றும் தகவல் சேவைகள் துறையில் உங்கள் தொழில் மற்றும் உயர்கல்வியைத் தொடர சந்தேகத்துக்கு இடமின்றி நீங்கள் மிகச்சிறந்த இடத்தைத் தேர்ந்தெடுத்துள்ளீர்கள் என நான் மீண்டும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நூலகவியல் துறையில் போதிய அறிவு, பயிற்சி, திறன்களை உங்களுக்கு வழங்கக்கூடிய இத்துறை சார்ந்த செயல்திறனும் ஆற்றலும் கொண்ட ஆசிரியர்கள் பேராதனையில் உள்ளார்கள். அவ்வகை நிபுணத்தவம் கொண்டவர்களை சந்திக்கும் அரிய வாய்ப்பினை பேராதனையில் நீங்கள் பெறவுள்ளீர்கள். மேலும், பேராதனைப் பல்கலைக்கழகமானது பல்-இன, பல்-மத, பன்மொழி சமூகச் சூழல் பின்புலத்தைக் கொண்டதாகையால் உங்களது சமூக அனுபவங்களை மேம்படுத்தும் வாய்ப்பினையும் நீங்கள் இங்கு பெறுவீர்கள்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நீங்கள் தொடரவுள்ள இக்கற்கை நெறியைக் கடினமின்றி மேற்கொள்ள உதவும் மிக முக்கிய தகவல்கள் பலவற்றை இக்கையேடு கொண்டுள்ளது. இதில் உளளடக்கப்பட்டுள்ள தகவல்கள் தொடர் தொலைக்கல்வி நிலையத்தின் (CDCE) செயற்பாடுகள், இந்நிகழ்ச்சித் திட்டத்தின் விபரங்கள், இக்கற்கை நெறியின் கட்டமைப்பு, ஆசிரியர் குழு, இந்நிகழ்ச்சித் திட்டத்தின் சட்ட விதிகள் போன்றவற்றைப் பற்றி உங்களுக்கு பரிச்சயம் வழங்குகிறது.

இந்நிகழ்ச்சித் திட்டத்தின் மூலமாக நீங்கள் உச்சப்பயனை அடைவீர்கள் எனவும் உங்கள் எதிர்கால தொழில் வாய்ப்புக்களை வளப்படுததிக் கொள்வீர்கள் எனவும் நம்புகின்றேன். இந்நிகழ்ச்சித் திட்டத்தின் தரத்தை மேம்படுத்தவும் எமது நிலையத்தை மாணவர் நட்பு மிக்க ஒரு உயர் கல்வி மையமாகப் பேணவும் தயக்கமின்றி எம்முடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். இறுதியாக, உங்கள் எதிர்கால முயற்சிகள் அனைத்தும் வெற்றியடைய மனதார வாழ்த்துகிறேன்.

கலாநிதி ரத்நாயக்க எம். அபேரத்ன
இயக்குனர்
பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தொடர் தொலைக்கல்வி நிலையம் (CDCE)

## பிரதான நூலகரின் ஆசிச் செய்தி



பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பிரதான நூலகர் என்கின்ற வகையில் பல்கலைக்கழக தொடர் தொலைக்கல்வி நிலையத்தினரால் நடாத்தப்படும் நூலகவியல் மற்றும் தகவல் சேவைகள் டிப்ளோமா கற்கை நெறியின் புதிய மாணவர்களாகிய உங்களை வரவேற்பதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். இக்கற்கை நெறியினைத் தொடர்வதற்கு தகுதி பெற்றுள்ள நீங்கள் ஒரு நூலகமொன்றை வெற்றிகரமாக நிர்வகிக்கத் தேவையான போதிய அறிவையும் ஆற்றலையும் பெற்றுக் கொள்வீர்கள் என நான் உறுதியாக நம்புகின்றேன்.

இக்கற்கை நெறியினை நீங்கள் வெற்றிகரமாக பூர்த்தி செய்த பின் இந்நாட்டிலும் வெளிநாடுகளிலும் உள்ள பல்வேறு வகைகளைச் சார்ந்த நூலகங்களில் பணிபுரியும், அவற்றை நிர்வகிக்கும் வாய்ப்புகளைப் பெறுவீர்கள். பொது நூலகங்கள், பாடசாலை நூலகங்கள், பலகலைக்கழக நூலகங்கள், கல்விக் கழக நூலகங்கள், அரசாங்க நூலகங்கள், பல்கலைக்கழக நூலகங்கள், அரச சார்பற்ற நிறுவன நூலகங்கள் மற்றும் விசேட நூலகங்கள் போன்றவற்றிலும் பணிபுரிய தேவையான அறிவு, திறன்களையும் இக்கற்கை நெறி மூலம் நீங்கள் பெறவுள்ளீர்கள். தற்சமயம் நூலகவியல் மற்றும் தகவல் சேவைகள் துறையில் புரியும் மாணவ மாணவியருக்கு பதவி உயர்வு, தொழில் முன்னேற்றம் முதலியன கிடைக்கப் பெறுவதற்கு இக்கற்கை நெறி உறுதுணையாக அமையவுள்ளது. நீஙகள் இக்கற்கை நெறியினை வெற்றிகரமாக பூர்த்தி செய்த பின், நூலகவியல் துறையில் உயர் டிப்ளோமா, பட்டப் படிப்பு, பட்ட பின் படிப்பு கற்கை நிகழ்ச்சித் திட்டங்களைப் பயிலும் வாய்ப்புக்களைப் பெறுவீர்கள்.

பேராதனைப் பல்கலைக்கழக நூலக சேகரிப்பானது 1921 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. எனவே, இவ்வருடத்தில் நாம் எம் பல்கலைக்கழக நூலக சேகரிப்பின் நூற்றாண்டினைக் கொண்டாடுகின்றோம். நூலகவியலைக் கற்பித்தல் என்பது எமது பல்கலைக்கழகத்துக்கு ஒரு புதிய அனுபவமல்ல. பேராதனைப் பல்கலைக்கழகமானது 1961 ஆம் ஆண்டு ஓர் பட்ட பின்படிப்பு டிப்ளோமா கற்கை நெறியினை நடாத்தியுள்ளது. இக்கற்கை நெறியானது 1965 ஆம் ஆண்டு நிறுத்தப்பட்டு களனிப் பல்கலைக்கழகத்துக்கு மாற்றல் செய்யப்பட்டது. எனினும், எம் பல்கலைக்கழக நூலகமானது இலங்கை நூலக சங்கத்தினதும், களனிப் பல்கலைக்கழகத்தினதும் மாணவர்களுக்குத் தேவையான நூலகவியல் தொடர்பான பிரயோகப் பயிற்சிகளை இன்றைய நாள் வரை வழங்கி வருகின்றது என்பதனை மிகப் பெருமையுடன் அறியத் தருகின்றேன். நூலக சேகரிப்பின் நூற்றாண்டினைக் கொண்டாடும் 2021 ஆம் ஆண்டில் பேராதனைப் பல்கலைக் கழகம் தனது தொடர் தொலைக் கல்வி நிலையத்தினூடாக நூலகவியல் கற்கை நெறியினை ஆரம்பிப்பது குறித்து நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.

நான் இச்சந்தர்ப்பத்தில் எமது உபவேந்தர் அவர்களுக்கும், பல்கலைக்கழக மூதவை உறுப்பினர்களுக்கும், பல்கலைக்கழக பேரவை உறுப்பினர்களுக்கும், கலைப்பீட வாரியத்துக்கும், தொடர் தொலைக் கல்வி நிலைய இயக்குனருக்கும், பிரதி இயக்குனர் (பயிற்சி) அவர்களுக்கும், கற்கை நெறி ஒருங்கிணைப்பாளருக்கும், அனைத்து விரிவுரையாளர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மாணவர்கள் தம் கல்விசார் நடவடிக்கைகளின் முன்னேற்றத்திற்காக எம் பல்கலைக்கழகத்தில் காணப்படும் எண்ணற்றதும் தனித்துவமானதுமான வசதி வாய்ப்புக்களை உச்ச அளவு பயன்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். அத்துடன், மாணவர்கள் தம் தலைமைத்துவ திறன்களையும், மென் திறன்களையும் மேம்படுத்தி நூலகவியற்றுறை தொழில் வல்லுநர்களாயும் பயனுள்ள பிரஜைகளாயும் மாறுவர் என நான் எதிர்ப்பார்க்கின்றேன். அத்துடன், பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நீங்கள் கல்வி கற்கும் காலமானது ஓர் மகிழ்ச்சிமிக்க அனுபவமாக மாற முழுமனதுடன் வாழ்த்துகிறேன்.

இராசையா மகேஸ்வரன்
பிரதான நூலகர்
பேராதனைப் பல்கலைக்கழகம்

## நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளரின் ஆசிச் செய்தி



பேராதனைப் பல்கலைக்கழக தொடர் தொலைக்கல்வி நிலையத்தினால் நடாத்தப்படும் நூலகவியல் மற்றும் தகவல் சேவைகள் டிப்ளோமா நிகழ்ச்சித் திட்டத்தில் பதிவான முதல் தொகுதி மாணவர்களான உங்கள் அனைவரையும் வரவேற்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட இந்நிகழ்ச்சித் திட்டமானது ஆரம்பிக்கப்படும் இத்தருணத்தில், 2021/2022 கல்வியாண்டிற்கான முதல் தொகுதி மாணவர்களை வரவேற்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். அத்துடன், தகவல் சேவைகள் துறைக்கு மிகவும் அவசியமான தொழில் முறை தகைமைகளை வழங்கும் வகையில் இந்த டிப்ளோமா நிகழ்ச்சித் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது என்பதனையும் அறிவிக்க விரும்புகின்றேன்.

இந்த கற்கை நெறியின் முக்கிய நோக்கம் யாதெனில், பயிற்றப்படும் மாணவர்கள் நூலகங்களில் திறன்மிக்க முறையில் பணிபுரிய தேவையான அறிவு, திறன்கள் மற்றும் அணுகுமுறைகள் போன்றவற்றை வழங்குவதாகும். இக்கற்கை நெறியினைப் பூர்த்தி செய்த மாணவர்கள் தாம் பெற்றுக்கொண்ட அறிவினையும் திறன்களையும் பிரயோகித்து நூலகமொன்றின் நாளாந்த செயற்பாடுகளை தன்னம்பிக்கையுடன் நிறைவேற்றும் பயன்மிக்க, திறன்மிக்க தொழிற்சார் உத்தியோகத்தராக அறிவுசார் சமூகத்தில் திகழ்வார்கள் என நான் உறுதியாக நம்பகிறேன். பல்கலைக்கழக துறையிலும் நூலக தகவல் சேவைகள் துறையிலும் அனுபவமுள்ள, உயர் கல்வித்தகைமைகளுடைய விரிவுரையாளர்கள் இந்த கற்கை நெறியினை அர்ப்பணிப்புடன் நடாத்திச் செல்ல ஆயத்தமாக உள்ளார்கள். இவ்வாசிரியர் குழுவிலுள்ள கல்விசார் அங்கத்தவர்களும் தொழில்சார் நிபுணர்களும் கற்பித்தல் செயன்முறையை ஒத்துழைப்புடன் நிறைவேற்றி செயல் திறன் மிக்க டிப்ளோமாதாரிகளை சமூகத்துக்கு வழங்குவார்கள் என நான் இத்தாள் உத்தரவாதம் வழங்குகின்றேன்.

தொடர் தொலைக்கல்வி நிலையத்தினர் வழங்கும் வசதி வாய்ப்புக்களை மாணவர்கள் பயன்படுத்தி திறமைமிக்க நபர்களாகவும் தொழில் வல்லுநர்களாகவும் ஆக்கப்பெற்று நம் தேசத்திலும் வெளிநாடுகளிலும் பயன்மிக்க வகையில் பணிபுரிவார்கள் என விருப்புடன் எதிர்ப்பார்க்கின்றேன். இந்தக் கையேடு தொடர் தொலைக்கல்வி நிலையத்தின் விதிமுறைகள் பற்றியும் பல்கலைக்கழகமொன்றில் கல்வி கற்கும் மாணவர்கள் பின்பற்ற வேண்டிய சட்ட விதிகள் குறித்தும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் முறையில் உள்ளது. எனவே, இக்கையேட்டின் உச்சப் பயனை பெறும்படி உங்களை நான் கேட்டுக்கொள்கின்றேன். இந்நிகழ்ச்சித் திட்டத்தில் பதிவாகியுள்ள நீங்கள் இக்கற்கை நெறியை வெற்றிகரமாக பூர்த்தி செய்து புதிய தொழில்முறை வாழ்க்கையை ஆரம்பிப்பீர்கள் என உறுதியாக நம்புகிறேன்.

உங்களது கற்றல் செயற்பாடுகள் வெற்றியடைய வாழ்த்துகிறேன்.

கலாநிதி பி. எம் எம். சி. பி. ஹிந்தகொல்ல
நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்

## பேராதனைப் பல்கலைக்கழகத்தின் வரலாறு

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தோற்றமானது இலங்கையின் முதலாவது பல்கலைக்கழகம் ஸ்தாபிக்கப்பட்ட 1942ம் ஆண்டு வரை நீள்கின்றது. பேராதனைப் பல்கலைக்கழகம் 1952ம் ஆண்டு அறிவுசார் முயற்சிகளுக்கு மிக பொருத்தமான மத்திய மலைநாட்டின் பேராதனை எனும் இடத்தில் மகாவலி ஆற்றங்கரையில் 1700 ஹெக்டெர் நிலப்பரப்பில் ஓர் குடியிருப்பு வளாகமாக நிறுவப்பட்டது. கல்விசார் ஊழியர்கள் 700 பேரையும் கல்விசாரா ஊழியர்கள் 2000 பேர்களையும் கொண்டு இயங்கும் இப்பல்கலைக்கழகமானது ஒரு வருடத்துக்கு சுமார் 2500 பட்டதாரிகளை உருவாக்குகின்றது. இக்காரணங்களுக்காக, இலங்கையில் உள்ள அனைத்து பல்கலைக்கழகங்களைப் பார்க்கிலும் பேராதனைப் பல்கலைக்கழகம் மிகப் பெரிய பல்கலைக்கழகமாக கருதப்படுகின்றது.

உயர் கல்வி வழங்கலில் பேராதனைப் பல்கலைக்கழகமானது அதி சிறந்த கேந்திர நிலையமாக திகழ்கின்ற அதேவேளை ஏனைய பல்கலைக்கழகங்களுடன் ஒப்பிடுகையில் கல்வி, ஆராய்ச்சி, குடியிருப்பு வசதிகள், பாடம் சாரா செயற்பாடுகளுக்கான வாய்ப்பு வசதிகள், இயற்கை அழகு, பன்முக கலாசார சூழல் போன்ற காரணிகளில் முன்னணி வகிக்கின்றது. மாணவர் சேர்ப்பினைப் பொருத்தவரை மிக அதிகமான மாணவர்களை உள்வாங்கும் பேராதனைப் பல்கலைக்கழகம் விவசாயம், இணைந்த சுகாதாரக் கற்கைகள், பல்மருத்துவம், பொறியியல், மானுட சாத்திரங்கள், சட்டம், முகாமைத்துவம், மருத்துவம், இயற்கை விஞ்ஞானங்கள், சமூக விஞ்ஞானங்கள், கால்நடை மற்றும் மிருக மருத்துவத்துறை, கால்நடை அறிவியல் போன்ற பல்வகை துறைகளைப் போதிக்கின்றது.



## தொடர் தொலைக்கல்வி நிலையத்தின் வரலாறு


பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தொடர் தொலைக்கல்வி நிலையத்தின் (CDCE) ஆரம்பமானது அப்பல்கலைக்கழகத்தின் வெளிவாரி பரீட்சைகள் கிளை நிறுவப்பட்ட 1965 ஆம் வருடமாக கருதப்படுகின்றது. பல்வேறுபட்ட வளர்ச்சிக் கட்டங்களைக் கடந்துச் சென்று பல்வேறு பெயர்களைக் கொண்டு இயங்கிய இந்நிலையம் தற்போதுள்ள நிறுவன கட்டமைப்பைப் பெற்று ‘‘தொடர் தொலைக் கல்வி நிலையம்’’ என இன்று அழைக்கப்படுகின்றது. பேராதனைப் பல்கலைக்கழகத்திக் பெருநிறுவன இலக்குகளில் ஒன்றான ‘‘திறந்த தொலைத் தூர கல்வி போதனையில் முதன்மையாளராதல்’’ எனும் இலக்கினை அடையும் பொருட்டு CDCE நிறுவப்பட்டு இயங்கி வருகின்றது.

தொடர் தொலைக்கல்வி நிலையத்தின் (CDCE) தூரநோக்கு யாதெனில், தம் தொழில்சார் இலக்குகளை அடைய ஆர்வமுடன் எத்தனிக்கும் மாணவர்களுக்கு சம வாய்ப்புகளை வழங்குவதாகும். ‘‘கல்வி வாய்ப்புகளைத் நாடும் அனைவருக்கும் தடையின்றி கல்வி வாய்பினை வழங்குதல்’’ என்பது தொடர் தொலைக் கல்வி நிலையத்தின் பணி அறிக்கையாகும்.

தொடர் தொலைக்கல்வி நிலையத்தின் ஆளுகையானது மேலாண்மை வாரியத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது. தொடர் தொலைக்கல்வி நிலைய (CDCE) முகாமைத்துவ வாரியத்திற்கு உபவேந்தர் தலைமைத்துவம் வழங்குகின்றார். அத்துடன், தொடர் தொலைக்கல்வி நிலையத்தின் இயக்குனராக மூத்த கல்வியாளர் ஒருவர் செயற்படுகின்றார். மூத்த கல்வியாளர்கள் மூவர் இயக்குனரின் முகாமைத்துவ செயற்பாடுகளுக்கு உதவியாக ஒருங்கிணைப்பு நடவடிக்கைளில் ஈடுபடுகின்றனர். நிலையத்தின் நிருவாகமானது பல்கலைக்கழக பதிவாளரின் கட்டுப்பாட்டிற்குள் உள்ளது. சிரேஷ்ட உதவி பதிவாளர், உதவி பதிவாளர், உதவி நிதியாளர் ஆகியோர் நிலையத்தை நேரடியாக நிருவகிக்கின்றனர். எழுதுவினைஞர் மற்றும் ஒருங்கிணைந்த தரத்தைச் சார்ந்த 17 கல்விசாரா ஊழியர்களும், தொழிநுட்ப தரத்தைச் சார்ந்த இருவரும், பகுதிநுட்ப ஊழியர்கள் 04 பேரும் நிலையத்தில் கடமையாற்றுகின்றனர்.



தொடர் தொலைக்கல்வி நிலையத்தின் நிர்வாக கட்டமைப்பு வரைபடம்



## ஊழியர்கள்

### BOARD OF DIRECTORS

**Director**
Dr. R.M. Abeyrathne

**Coordinator – Learning Resources**
Prof. C. Wickramasinghe

**Coordinator - Training**
Dr. S. Maheswaran

**Coordinator- Registration & Examination**
Dr. Prabath Ekanayake

### ADMINISTRATIVE STAFF

**Senior Assistant Registrar**
Ms. Irani Pathirana

**Assistant Registrar**
Ms. Lasni Buddhibhashika Jayasooriya

**Senior Assistant Bursar**
Mr. Indika Basnayake

### ACADEMIC SUPPORT STAFF

**System Analysist**
Ms. V. Senevirathne


### NON- ACADEMIC STAFF

Mrs. M. M. S. Mallawa
Mrs. R. A. S. P. Ranaweera
Mrs. A. G. H. Amukotuwa
Mrs. M. P. Assalaarachchi
Mrs. M. M. R. Ekanayake
Mr. S. Wijenayaka
Mr. W. M. P. D. S. K. Wijeratna
Mrs. M. P. Jayawardana
Mr. A. M. S. U. Manoratna
Mr. B. M. D. N. B. Basnayake
Mr. H. A. D. C. Kumara
Mr. L. L. Senevirathne
Ms. A. G. H. N. Subodhani
Mr. H. L. C. A. Liyanage
Ms. N. D. Egodapitiya
Ms. D. M. A. N. U. Dissanayake
Mr. W. A. S. K. Wijethunga
Mrs. A. M. N. K. Aththanayake
Ms. C. S. D. Widanage
Ms. P. Manickam
Ms. G. P. Gunawardana
Mr. M. Manoraj
Mr. A. G. D. Amalka
Mr. B. G. S. N. Yapa Bandara
Mr. N. G. C. Jayaruwan

## கற்கை நெறி அறிமுகம்

தற்சமயம் பரிணமித்துக் கொண்டிருக்கும தகவல் சமூகத்துடன் தொடர்புடைய தனித்துவமான தொழில்முறைக் கல்வியை நூலகம் மற்றும் தகவல் சேவைகள் டிப்ளோமா நிகழ்ச்சித் திட்டம் வழங்குகிறது. நூலகங்கள் மற்றும் தகவல் நிலையங்களில் பணியாற்ற தேவையான திறன்களையும் அறிவினையும் மாணவர்களுக்கு வழங்கும் பொருட்டு இக்கற்கை நெறி விரிவான பயிற்சியை வழங்குகிறது. மேலும், மாணவர்கள் நூலக முகாமைத்துவம், நூலக சாதனங்களை பட்டியலாக்கம் செய்தல், வகுப்பாக்கம் செய்தல், டிஜிட்டல் மற்றும் இலத்திரனியல் கருவிகளை பயன்படுத்தல், நூலக சாதன சேகரிப்பு முகாமைத்துவ திறன்கள், பொது நூலகங்கள் மற்றும் பாடசாலை நூலகங்களை முகாமைத்துவம் செய்தல், நூலக வாடிக்கையாளர்கள் பராமரிப்புச் சேவை குறித்த திறன்கள் போன்றவற்றைக் குறித்த அறிவினைப் பெற்றுக் கொள்வார்கள்.

இந்நிகழ்ச்சித் திட்டமானது மாணவர்களை அறிவுசார் சமூகத்தில் பயன்மிக்க, திறன்மிக்க தொழில்சார் உத்தியோகத்தராய் மாற்றிட உதவியளிக்கின்றது. நூலக மற்றும் தகவல் சேவைகள் துறையில் தம் தொழில் வாழ்க்கையை மேம்படுத்த விரும்புபவர்களுக்கு இக்கற்கை நெறியானது தொழில் வளர்ச்சிக்கான புதிய வழிகளையும் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்திலான தொழில் வாய்ப்புக்களையும் திறக்கவுள்ளது.



## அனுமதித் தகைமைகள்

மாணவர் பதிவிற்கான குறைந்தபட்ச தேவைகள்

i. க. பொ. த. (உயர்தர) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் அல்லது கலைப்பீட கற்கைகள் வாரியம் தீர்மானிக்கும் அதனையொத்த ஒரு பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்

**அல்லது**

ii. தேசிய தொழில்வாண்மை தகைமை மட்டம் (NVQ) தரம் 4 கற்கை நெறியொன்றை பூர்த்தி செய்திருத்தல்

**அல்லது**

iii. கலை கற்கைகள் வாரியம் தீர்மானிக்கும் இலங்கை கல்வித்தகைமை மட்ட நியமம் (SLQF) 02 இற்குச் சமனான நூலகவியல் மற்றும் தகவல் சேவைகள் தொடர்பான அடிப்படைக் கற்கை நெறியொன்றை பூர்த்தி செய்திருத்தல். அத்துடன், குறைந்தபட்சம் 12 வருட பாடசாலைக் கல்வியை பெற்றுள்ளதோடு திறனறித் தேர்வில் சித்தியடைந்திருத்தல்.

**அல்லது**

iv. நூலகம் மற்றும் தகவல் சேவைகள் துறையில் 4 வருட பணி அனுபவம். அத்துடன் குறைந்தபட்சம் 12 வருட பாடசாலைக் கல்வியைப் பெற்றிருத்தல் மற்றும் திறமைத் தேர்வில் சித்தி அடைதல்.

**குறிப்பு**: தம் தாய்மொழி அல்லாத வேறு எந்த மொழியிலும் கற்கை நெறியைத் தொடர விரும்பும் மாணவர்கள் அக்குறித்த மொழிக்கான திறமைச் சித்தியை அல்லது அதற்கு மேலான சித்தியை க. பொ. த. (சாதாரண தர) தேர்வில் பெற்றிருத்தல்.

## நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்கள்

இந்த நூலகவியல் மற்றும் தகவல் சேவைகள் நிகழ்ச்சித் திட்டமானது நூலகங்களில் பணிபுரிய அல்லது நிறுவனங்களில் காணப்படும் பாரிய அளவிலான தகவல்களைக் கையாள தேவையான அடிப்படை அறிவு, திறன்கள் மற்றும் உரிய உளப்பாங்கினை வழங்குகிறது. ஒரு நூலகத்தின் அன்றாட செயற்பாடுகளை தன்னம்பிக்கையுடன் நிறைவேற்றத் தேவையான திறன்களையும், அறிவையும் கொடுக்கின்றது. மேலும், அறிவுசார் சமூகத்தில் ஓர் பயனுள்ள, திறன்மிக்க பணியாளராக செயல்படவும் இந்நிகழ்ச்சித் திட்டம் வழிகோறுகிறது.

### கற்றல் விளைவுகள்

இந்நிகழ்ச்சித் திட்டத்தை வெற்றிகரமாக பூர்த்தி செய்த மாணவர்:

i. நூலகவியலின் அடிப்டை அறிவு, தத்துவம், மற்றும் நெறிமுறைகளை தம்முள் நிரூபனமாக்குவர்.
ii. நூலக வளங்களை ஒழுங்குபடுத்துகையில் தத்துவார்த்த அறிவைப் பிரயோகிப்பர்.
iii. தரநிலை பகுப்பாக்கத் திட்டங்களைப் பயன்படுத்தி ஆவணங்களைப் பகுப்பாய்வு செய்து வகுப்பாக்கத்தக்கு உள்ளாக்குவர்.
iv. பயனுள்ள நூலக சேவைகளை வழங்கும் பொருட்டு நூலக வளங்களை அடையாளம் கண்டு ஒழுங்கமைப்பர்.
v. தகவல் வள நிலையங்களை நிறுவத் தேவையான முகாமைத்துவ மற்றும் நிர்வாகத் திறன்களை தம்முள் உள்ளதென்பதை நிரூபனமாக்குவர்.
vi. நூலகங்களில் தகவல் தொடர்பு தொழிநுட்பத்தை பிரயோகிக்கத் தேவையான தொழிநுட்ப அறிவு, திறன் மற்றும் நிபுணத்துவம் போன்றவற்றைப் பயன்படுத்துவர்.



## டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டத்தின் அமைப்பு

இந்த டிப்ளோமா நிகழ்ச்சித் திட்டமானது இலங்கை கல்வித்தகைமை மட்ட நியமத்தின் மூன்றாம் தர (SLQF Level 3) மற்றும் தேசிய தொழில்வாண்மை தகைமை மட்டத்தின் தரம் 5 (NVQ Level 5) இற்கு இணையாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கால எல்லை 02 பருவங்கள் (Semester), அதாவது ஏறத்தாழ ஒரு வருடமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இக்கற்கை நெறியினைப் பூர்த்தி செய்வதற்கு மாணவர்கள் குறித்த பருவத்தில் பாட அலகொன்றை விருப்பு பாடமாகத் தெரிந்தெடுக்க அனுமதிக்கப்படுவார்கள்.

| பருவம் | பாட நெறிக் குறியீடு | பாட அலகு தலைப்பு | திறமை மட்டங்களின் எண்ணிக்கை | கட்டாயம்/ விருப்பு |
|---|---|---|---|---|
| 1 | LIB 1113 | நூலகங்கள் மற்றும் நூலகத்துவம் பற்றிய அறிமுகம் | 3 | C |
| | LIB 1123 | அறிவு ஒழுங்கமைப்பு | 3 | C |
| | LIB 1133 | நூலக சேகரிப்பு அபிவிருத்தி | 3 | C |
| | LIB 1142 | தகவல் வளங்கள் மற்றும் சேவைகள் (பகுதி 1) | 2 | C |
| | LIB 1153 | நூலக நிருவாகம் மற்றும் முகாமைத்துவம் | 3 | C |
| | LIB1162 | நூலகங்களில் சேவை தர முகாமைத்துவம் | 2 | O |
| | LIB1172 | பொது நூலக சேவைகளும் முகாமைத்துவமும் | 2 | O |
| 2 | LIB 1213 | நூலக சாதனங்களை பாதுகாத்தலும் பராமரித்தலும். | 3 | C |
| | LIB 1223 | தகவல் வளங்கள் மற்றும் சேவைகள் (பகுதி 1) | 3 | C |
| | LIB 1233 | நூலகங்களில் தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் | 3 | C |
| | LIB 1243 | நூலகங்கள், தகவல்கள் மற்றும் சமூகம் | 3 | O |
| | LIB 1253 | பாடசாலை நூலகத்துவம் | 3 | O |
| | LIB 1262 | நூலகவியல் மற்றும் தகவல் சேவைகள் பற்றிய தொழில் பயில்நிலை | 2 | C |
| மொத்தம் | | | 35 | |

### கற்கை மொழிமூலம்

சிங்களம், தமிழ், ஆங்கில மொழிகளில் இந்நிகழ்ச்சித் திட்டம் நடாத்தப்படும்.

## மாணவர் பதிவு

கற்கை நெறிக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள், நிர்ணயிக்கப்பட்ட பதிவுக்கட்டணம் உட்பட தொடர்புபட்ட ஏனைய கட்டணங்களைச் செலுத்துவதன் மூலம் பதிவு செய்து கொள்ளப்படுவர். மாணவர்கள் குறைந்தபட்சம் ஒரு வருடத்தில் கற்கை நெறியை பூர்த்தி செய்வர். அவ்வாறு ஒரு வருடத்தில் பூர்த்தி செய்ய தவறும் மாணவர்கள் ஆகக்கூடியது 04 வருடங்களுக்குள் கற்கை நெறியினை பூர்த்தி செய்வது அவசியம்.

### பதிவினை புதுப்பித்தல்

பதிவு செய்யப்பட்ட மாணவர்கள் டிப்ளோமா நிகழ்ச்சியின் அனைத்துத் தேவைகளையும் பூர்த்தி செய்யும் வரை தமது பதிவு நிலையை காலாவதியாகாமல் தக்கவைத்துக் கொள்வதற்கு வருடத்திற்கு ஒருமுறை பதிவுக்கட்டணத்தைச் செலுத்தி தம் பதிவினைப் புதிப்பித்துக் கொள்வது அவசியம். புதிவை புதுப்பிப்பதற்கான விண்ணப்பங்கள் பதிவு காலாவதியாகும் தேதிக்கு குறைந்தது 02 மாதங்களுக்கு முன்னதாகத் தொடர் தொலைக்கல்வி நிலையத்தின் (CDCE) உதவி பதிவாளருக்கு அனுப்பப்பட வேண்டும்.

### பதிவினை ஒத்திவைத்தல் அல்லது பிற்போடல்

மாணவர் ஒருவரது வேண்டுகோளின் பேரில் மருத்துவக் காரணங்களுக்காக அல்லது கலைப்பீட கற்கைகள் வாரியம் ஏற்றுக்கொள்ளும் வேறெந்த காரணத்திற்காகாவும் அவரது பதிவினை ஒத்தி வைக்க அவருக்கு அனுமதி வழங்கப்படும். இதன்பொருட்டு கையளிக்கப்படும் மருத்துவ சான்றிதழானது பல்கலைக்கழக சுகாதார நிலையத்தின் தலைமை மருத்துவ அதிகாரி/ தொடர் தொலைக்கல்வி நிலையத்தினால் நியமிக்கப்பட்ட வேறு எந்தவோர் மருத்துவ அதிகாரியின் அனுமதி பெற்றதாக அமைய வேண்டும். மருத்துவக் காரணங்கள் தவிர்ந்த ஏனைய காரணங்களுக்கான ஒத்தி வைப்பு கோரிக்கை விண்ணபத்துடன் உறுதி மொழி பத்திரம் (சத்தியக் கடிதம்) அல்லது ஆவணச்சான்று ஒன்று இணைக்கப் பெற்றிருக்க வேண்டும். ஒத்தி வைப்பு நீட்டிப்புக்கான கோரிக்கைகள் தொடர் தொலைக்கல்வி நிலையத்தின் சிரேஷ்ட உதவி பதிவாளரிடம் பதிவு காலாவதி தேதிக்கு குறைந்தது ஒரு மாதத்திற்கு முன்பாக அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

### இந்நிகழ்ச்சிதிட்டத்திலிருந்து நீங்குதல்

பதிவு செய்த பிறகு, ஒரு மாணவர் நிகழ்ச்சித் திட்டத்திலிருந்து விலக முடிவு செய்தால், பதிவு செய்யப்பட்ட நாளிலிருந்து 04 வாரங்களுக்குள் சிரேஷ்ட பதிவாளரிடம் இதற்கான எழுத்துப்பூர்வ கோரிக்கையை (குறித்த படிவத்தின் மூலம்) விடுக்க வேண்டும். ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களை அடிப்படையாகக் கொண்ட கோரிக்கைகள் மாத்திரமே அங்கீகரிக்கப்படும். எவ்வாறாயினும், மேற்கூறிய நிபந்தனைகளுக்கு அமைய விலகிக்கொள்ளும் மாணவர்கள் செலுத்திய கட்டணங்கள் மீள் செலுத்தப்பட்டாலும் அதன் மூன்றில் ஒரு பகுதியினை பல்கலைக்கழகம் அபராதமாக அறவிட்டுக்கொள்ளும். நான்கு வாரங்களுக்குப் பின்னர் விலகுவதற்கான கோரிக்கை விடுக்கும் மாணவர்களுக்கு தாம் ஏற்கனவே செலுத்திய கட்டணங்கள் மீள் வழங்கப்படுவதில்லை.

## மாணவர் வரவு

மாணவர்கள் விரிவுரைகளில் கலந்து கொள்வது கட்டாயமாகும். கற்கை நெறியின் கற்பித்தல் திட்டத்திற்கு ஏற்ப எல்லா விரிவுரை அமர்வுகளிலும், பிரயோக வகுப்புகளிலும், கள அமர்வுகளிலும் மாணவர்கள் பங்குபற்றுதல் அவசியம். விரிவுரைகளுக்கான மாணவரது குறைந்த பட்ச வரவு 80% ஆகும். பருவத்தில் பரீட்சைக்கு அமர்வதற்கான அனுமதி பெற மாணவர்கள் மேற்கூறிய நிபந்தனைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

## மாணவர் மதிப்பீடுகள்

மாணவர் மதிப்பீடுகள் பாடநெறியினூடான மதிப்பீடு மற்றும் பருவ இறுதித் தேர்வு ஆகிய 02 பகுதிகளை உள்ளடக்கியுள்ளது.

- இறுதி தேர்வு 40% - 60%
- கற்கை நெறி மதிப்பீடுகள் (இடைப்பருவத் தேர்வுகள், ஒப்படைகள்) - 40% - 60%

டிப்ளோமாவைப் பெற்றுக்கொள்ள மாணவர்கள் பின்வரும் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

- இரண்டு பருவங்களிலும் குறைந்த பட்சம் 30 தகு மதிப்புக்களை (credits) பூர்த்தி செய்திருத்தல் (25 தகு மதிப்புக்களைக் கட்டாய பாடங்களில் இருந்தும் எஞ்சிய ஏனைய 05 தகு மதிப்புக்களை 02 பருவங்களிலும் உள்ள விருப்பு பாடங்களைக் கற்பதன் மூலமும் பர்த்தி செய்யலாம்).
- குறைந்த பட்ச தகு மதிப்புக்களுக்கு மாணவரது பெறுபேற்றில் “E” தர சித்திகள் காணப்படக்கூடாது.
- குறைந்த பட்ச GPA 2.00 ஆகும்.

முதல் முயற்சியிலேயே தேர்ச்சி பெறாதவர்கள் அடுத்த இறுதி பருவத் தேர்வில் தோற்ற அனுமதி வழங்கப்படுவார்கள். ஒரு குறித்த பாடத்திற்குரிய தேர்வில் சித்தியடைவதற்கு வழங்கப்படும் அதிகபட்ச வாய்ப்புக்கள் 03 மாத்திரமே ஆகும். தேர்வில் 2வது அல்லது 3வது தடவைகளில் தோற்றி சித்தியடைந்தவர்களுக்கு வழங்கப்படும் அதிக பட்ச தரம் “C” ஆகும். தரப்படும் 03 வாய்ப்புகளிலும் கற்கை நெறிக்கு தம்மை மீண்டும் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

**டிப்ளோமா கற்கை நெறிக்கு வழங்கப்படும் விசேட சித்தி மற்றும் திறமை சித்தி**

விசேட சித்தி மற்றும் திறமை சித்தி மற்றும் திறமை சித்திகளைப் பெறுவதற்கு

i. GPA 3.7 அல்லது அதற்கு மேற்பட்ட அளவைப் பெற்றுக்கொள்ளல்

ii. ஆகக்குறைந்தது முதல் அமர்விலேயே குறைந்தபட்சம் “C” தரம் அல்லது அதற்கு மேற்பட்ட தரங்களைப் பெற்றிருத்தல்

திறமை சித்தி பெறுவதற்கு

i. GPA 3.3 இனை அல்லது அதற்கு மேற்பட்ட அளவை பெறல். ஆனால், 3.69 இற்கு குறைந்த பெறுமானமாக இது அமைய வேண்டும்.
ii. அனைத்து பாடங்களுக்கும் முதல் அமர்வில் குறைந்த பட்சம் “C” தரம் அல்லது மேற்பட்ட அளவினைப் பெறல்.

**கோரிக்கைகள் மற்றும் முறையீடுகள்**

இக்கற்கைநெறியுடன் தொடர்புடைய மேலே குறிப்பிட்ட விதிமுறைகளுக்கு உட்படாத உமது கோரிக்கைகள், மேல் முறையீடுகள் மற்றும் கேள்விகள் ஏதும் இருப்பின் அவற்றை எழுத்துப்பூர்வமாக தொடர் தொலைக் கல்வி நிலையத்தின் சிரேஷ்ட உதவி பதிவாளருக்கு அனுப்பி வைக்கவும்.

## ஆசிரியர் குழு

விரிவுரைகளானது அனுபவமிக்க மற்றும் நிபுணத்துவம் வாய்ந்த விரிவுரையாளர்களால் மேற்கொள்ளப்படுகின்றது. விரிவுரைகளும் கலந்துரையாடல்களும் வார இறுதி நாட்களிலேயே இடம்பெறும்.

Mr. R. Maheswaran
B.A. *(Hons.)* (Peradeniya, Sri Lanka); MLS (Colombo, Sri Lanka)

Dr. C. N. K. Alahakoon
B.A.*(Hons.) (*Peradeniya, Sri Lanka); MLS, Ph.D. (Colombo, Sri Lanka)

Mrs. C. Gunasekara
B.Sc. *(Hons.) (*Sri Jayawardenepura, Sri Lanka), MLS (Colombo, Sri Lanka)

Dr. S. Maheswaran
B.Com. (*Hons*), MBA (Peradeniya, Sri Lanka), Ph.D. (Norway)

Mrs. Neetha Damayanthi
B.Sc. (*Agric.*), M.Phil. (Peradeniya, Sri Lanka), MLS (Colombo, Sri Lanka)

Mrs. Kanchana Dehigama
B.A. (*Hons*.) (Peradeniya, Sri Lanka), MSSc (Kelaniya, Sri Lanka)

Mrs. Harshani Dissanayake
B.Sc. *(Hons.)*, M.Phil. (Peradeniya, Sri Lanka), MLS (Colombo, Sri Lanka)

Mr. Sunil Premarathna
B.A.*(Hons.)*, M.A. (Peradeniya, Sri Lanka), MLS (Colombo, Sri Lanka)

Dr. B. M. M. C. B. Hindagolla
B.A.*(Hons.)*, M.A. (Peradeniya, Sri Lanka), MLS (Colombo, Sri Lanka), Ph.D. (Japan)

Mr. Ajantha Dharmarathna
B.A.*(Hons.)* (Peradeniya, Sri Lanka) MLS (Colombo, Sri Lanka)

Mrs. Dilani Abeyrathne
B.Sc. *(Hons)* (Peradeniya, Sri Lanka) MLS (Colombo, Sri Lanka)

Mrs. Sureni Weerasinghe
B.Sc. *(Hons)* (Peradeniya, Sri Lanka) MLS (Colombo, Sri Lanka)

Mr. M. M. Rifaudeen
B.Sc. (*Agric.*) (Peradeniya, Sri Lanka), MLS. (Colombo, Sri Lanka)

Mr. N. Ravi Kumar
B.Sc. *(Hons)* (EUSL, Sri Lanka) MLS (Colombo, Sri Lanka)

Dr. T. Pratheepan
B.Sc. *(Hons)* (EUSL, Sri Lanka), M.Sc. (India), Ph.D. (Kelaniya, Sri Lanka)

Mr. V. Alagaratnam
B.A. (*Hons*) (EUSL, Sri Lanka), M.Phil. (Jaffna, Sri Lanka); MLS. (Colombo, Sri Lanka)

## பாடநெறிகளின் விபரம்

***1ST SEMESTER***

LIB 1113: Introduction to Libraries and Librarianship - நூலகங்கள் மற்றும் நூலகத்துவம்: ஓர் அறிமுகம்

LIB 1123: Knowledge Organization - அறிவு ஒழுங்கமைப்பு

LIB 1133: Collection Development - நூலக சேகரிப்பு அபிவிருத்தி

LIB 1142: Information Resources & Services (Part I) - தகவல் வளங்களும் சேவைகளும் (பகுதி 1)

LIB 1153: Library Administration and Management - நூலக நிர்வாகமும் முகாமைத்துவமும்

LIB 1162: Managing Service Quality in Libraries - நூலகங்களில் சேவை தர முகாமைத்துவம்

LIB 1172: Services & Management in Public Libraries - பொது நூலக முகாமைத்துவமும் சேவைகளும்

***2ND SEMESTER***

LIB 1213: Preservation & Conservation of Library Materials - நூலக தகவல் வளங்களை பராமரித்தலும் பாதுகாத்தலும்

LIB 1223: Information Resources & Services (Part II) - தகவல் வளங்களும் சேவைகளும் (பகுதி 2)

LIB 1233: ICT in Libraries - நூலகங்களில் தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம்

LIB 1243: Libraries, Information and Society - நூலகங்கள், தகவல், மற்றும் சமூகம்

LIB 1253: School Librarianship - பாடசாலை நூலகத்துவம்

LIB 1262: Internship in Library & Information Services - நூலகவியல் மற்றும் தகவல் சேவைகள் தொடர்பான தொழில் பயில்நிலை

## பாடநெறிகளின் உள்ளடக்கம்

### 1ம் பருவம்

### LIB 1113: நூலகங்கள் மற்றும் நூலகத்துவம்: ஓர் அறிமுகம்

கடதாசி பரிணமித்த வரலாறு: கடதாசியின் பரிணாமம், நூல் அச்சாக்கம், நூல் வியாபாரம் மற்றும் இலத்திரனியல் தகவல் வளங்கள் நூலகங்களின வரலாறு: ஆரம்பகாலம் முதல் தற்காலம் வரை, நூலகங்களின் வகைகள், சுவர்களற்ற நூலகங்கள், நூலகத்துவம் தொடர்பான ஒழுக்க நெறிகள், தொழில்சார் அமைப்புகள்: தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் நூலகவியல் மற்றும் தகவல் சேவைகள் துறையினை ஊக்குவிப்பவர்கள்.

### LIB 1123: அறிவு ஒழுங்கமைப்பு

நூலக பகுப்பாக்கம், பட்டியலாக்கம்: ஓர் அறிமுகம்: வரைவிலக்கணங்கள், தேவை, குறிக்கோள் நூலொன்றின் பாகங்களை இனங்காணல், விடயங்கள் பற்றிய கோட்பாடு: பகுப்பாக்கம் மற்றும் பட்டியலாக்கம் பற்றிய தத்துவங்களும் நடைமுறைகளும், பகுப்பாக்கத் திட்டங்கள், விடய பட்டியலாக்கம், பிரதான மற்றும் துணை பதிவுகள், பட்டியலைக் கோவைப்படுத்தலும் பராமரித்தலும், அழைப்பு எண் பற்றிய எண்ணக்கரு, பருவ இதழ்களையும் இலத்திரனியல் வளங்களையும் பட்டியலாக்கம் செய்தல், பயிற்சி மற்றும் பிரயோக அலகு: பல்வேறுபட்ட தகவல் வள வடிவங்கள் 25 இனைக் கொண்ட பதிவுகளை உள்ளடக்கிய செயல் நூல் ஒன்றினைத் தயாரித்தல். நீங்கள் தயாரித்த அச்செயல்நூலை முதலாம் பருவத்தின் இறுதிப் பரீட்சை ஆரம்பமாவதற்கு ஒரு மாதத்திற்கு முன் மதிப்பீடு செய்யப்படுவதற்காக CDCE இற்கு கையளிக்க வேண்டும்.

**LIB 1113: நூலக சேகரிப்பு அபிவிருத்தி**

முறைகள் மற்றும் கொள்கைகள் பற்றிய அறிமுகம், நூலக சாதனங்கள்: அச்சு வடிவ மற்றும் அச்சு வடிவமல்லாத தகவல் வளங்கள், நூலக தகவல் வளங்களைத் தெரிவு செய்தல்: நூலக சாதனங்களைத் தெரிவு செய்ய உபயோகிக்கும் கருவிகள், தகவல் வள ஈட்டல் செயல்முறை: தகவல் வள கொள்வனவுக் கட்டளைகளை மேற்கொள்ளலும் தகவல் வளங்களைப் பெற்றுக்கொள்ளலும், நூல்களை ஈட்டல் செய்தல், ஈட்டல் செய்யப்பட்ட தகவல் வளங்களை பாவனைக்காக தயார்படுத்தும் செயன்முறை, சேகரிப்பும் பராமரிப்பும், தகவல் வள கணக்கெடுப்பும் தகவல் வள நீக்கமும்.

**LIB 1142: தகவல் வளங்களும் சேவைகளும் (பகுதி 1)**

அச்சு வடிவ தகவல் சாதனங்களும் அச்சு வடிவற்ற தகவல் சாதனங்களும், முதல் நிலை, இரண்டாம் நிலை, மூன்றாம் நிலை தகவல் வளங்கள், தகவல் வளங்களை மதிப்பீடு செய்தல், உசாத்துணை சேவைகள்: தேவை, வகைகள், (நோக்கு நிலை, உசாத்துணை சேவைகள், உசாத்துணை நூலகரின் பண்புகள்), தகவல் சேவைகளும் தகவல் உற்பத்திப் பொருட்களும்: புதிய தகவல்கள் பற்றி அறிவிப்புச் சேவைகள், நூல் விபரப் பட்டியல் சேவைகள், ஆவண விநியோகச் சேவைகள், தற்கால தகவல் விழிப்புணர்வுச் சேவைகள், விரிவாக்கச் சேவைகள், மொழிபெயர்ப்புச் சேவைகள், வாசகர்களுக்கான நூலக அறிமுகச் சேவைகள்: வரலாறு, பல்வேறுபட்ட நூலகங்களில் நடைபெறும் வாசகர் அறிமுகச் சேவைகள், வாசகர்களுக்கான நூலக அறிமுகச் சேவைகள் பற்றிய திறன்கள், தகவல் சேவைகளுக்கான மதிப்பீடு.

**LIB 1153: நூலக நிர்வாகமும் முகாமைத்துவமும்**

நூலக நிர்வாகம்: தத்துவங்களும் செயற்பாடுகளும், நூலக நிர்வாக அதிகார சபைகளும் குழுக்களும், நூலகங்களில் மனித வள முகாமைத்துவம்: வரைவிலக்கணம், குறிக்கோள்கள், முக்கியத்துவம், செயற்பாடுகள், வேலை விபரம், தொழில் பகுப்பாய்வு, தொழில் மதிப்பீடு நூலக ஆளணியிடல்: முக்கியத்துவம், ஆளணியிடல் பற்றிய தன்மையும் செயற்பாடுகளும், ஆளணி முகாமைத்துவம், ஆட்சேர்ப்பும் ஊழியரை தக்கவைத்தலும், நூலக நிதி முகாமைத்துவம்: நூலக நிதி முகாமைத்துவ தத்துவங்கள், நிதி வளங்கள், முறைமைகள், வரவு – செலவு நிதி ஒதுக்கீடு: அறிமுகம், வரவு செலவு பகுப்பாக்கம், பிரயோக ரீதியான செயன்முறைகள், வரவு – செலவு நிதி ஒதுக்கீடு, பதிவுகளும் அறிக்கைகளும்: மாதாந்த அறிக்கைகள், வருடாந்த அறிக்கைகள், நூலக புள்ளிவிபரம், நூலக கட்டிடங்கள்: திட்டமிடல், இடத்தெரிவு, கட்டிடத்தின் உட்புற வெளிப்புற சூழல்கள், செயற்பாடுகள், அமைவிட திட்ட வரைபடம், கட்டிட ஒளியூட்டுகை, தளபாடங்கள், நூலக உபகரணங்களும் நூலக பாதுகாப்பும்.

**LIB 1162: நூலகங்களில் சேவை தர முகாமைத்துவம்**

நூலகங்களில் சேவை தர முகாமைத்துவம்: அறிமுகம், எண்ணக்கருக்களும் மூலோபாயங்களும், தொடர்பாடல்: அறிமுகம், திறன்கள், மக்கள் தொடர்பு மற்றும் வாடிக்கையாளர் பராமரிப்பு, நூலகங்களில் தொடர்பாடல்: உட்புற வெளிப்புற சூழல், ஊழியர்களுக்கிடையே சிறந்த தொடர்பாடலின் அவசியமும் முக்கியத்துவமும், வாசகர்கள், எதிர்காலத்தில் நூலகத்தில் அங்கத்துவராகும் சாத்தியப்பாடுள்ள

வாடிக்கையாளர்கள், பிற நூலகங்கள், நிறுவனங்கள் மற்றும் ஊடகங்கள், சிறந்த தொடர்பாடலுக்கான தடைகள், தரமான வாடிக்கையாளர் சேவை: அறிமுகம், தரமான வாடிக்கையாளர் சேவைக்கான நிறுவன அமைப்புகளை உருவாக்கலும் அவற்றை நிருவகித்தலும், வாடிக்கையாளர் நடத்தை: வாடிக்கையாளர் தேவைகள் பற்றிய ஆராய்ச்சி, வாடிக்கையாளர் உறவுகள், பணிகள், தரம் பற்றிய பிரச்சினைகளை அடையாளம் காணலும் அவற்றுக்கான தீர்வுகளை கண்டடைதலும், தரமான வாடிக்கையாளர் சேவை வழங்கல்: பதிவுப் பராமரிப்பும் வாடிக்கையாளர் பின்னூட்டல்களைப் பெறுதலும், நூலகங்களும் சமூகமும்: மற்றவர்களுடன் எவ்வாறு நூலகங்கள் ஒத்துழைக்கின்றன, நூலகங்களின் வகைகளும் வாசகர் சமூகங்களும், நூலகங்கள் வழங்கும் விரிவாக்கற் சேவைகள்.

**LIB 1172: பொது நூலக முகாமைத்துவமும் சேவைகளும்**

பொது நூலகங்களின் வரலாறும் பணியும், பொது நூலகங்களின் வகிபாகம்: வளர்ச்சி மற்றும் போக்குகள், பாவனையாளர் சமூகங்களை அடையாளம் காணல்: சமூகத்தின் தகவல் தேவைகள், சுற்றுச்சூழல் நுண்ணாய்வு, பாவனையாளர் முன்னுரிமைகள், பொது நூலக அமைப்பு ஏற்படுத்தும் சமூக விளைவுகள், குறிப்பிடப்பட்ட அல்லது திட்டவட்டமான வாசகர்களுக்கும் வாசகர் சமூகங்களுக்கும் தகவல் சேவைகளை உருவாக்குதல்: சேவை விரிவாக்கற் திட்டங்களை திட்டமிடலும் அமுல்படுத்தலும், சந்தைப்படுத்தல் மற்றும் மக்கள் தொடர்பு குறித்த நடைமுறைகள் மூலம் நூலகச் சேவைகளை ஊக்குவித்தல்.

**2ம் பருவம்**

**LIB 1212: நூலக தகவல் வளங்களை பராமரித்தலும் பாதுகாத்தலும்**

நூலக வளங்களை பராமரித்தலும் பாதுகாத்தலும்: ஓர் அறிமுகம்: பராமரிப்பும் பாதுகாப்பும் என்றால் என்ன?, பராமரிப்புக்கும் பாதுகாப்புக்கும் உட்படுத்தப்படவேண்டிய நூலக சாதனங்கள் பற்றிய அறிமுகம்: நூலகள், கையெழுத்துப் பிரதிகள், கோப்புகள், செய்திப் பத்திரிகைகள், புகைப்படங்கள், ஓவியங்கள், நூலக சாதனங்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் காரணிகளை இனங்காணல்: மனிதன், உயிரினங்களும் சூழல் காரணிகளும், இயற்கை அனர்த்தங்கள், பாதிப்புகளின் வகைகளும் அவற்றுக்கான தீர்வுகள் மற்றும் பராமரிப்பு முறைகளும்: தினசரி மேற்பார்வையும் உரிய நடவடிக்கைகளும், தொடர்ச்சியான தூசியகற்றல் செயற்பாடுகள், கிருமிகளும் பூச்சி புழுக்களும் நூலக சாதனங்களை ஊடுறுவாது தடுத்தல்.

**LIB 1223: தகவல் வளங்களும் சேவைகளும் (பகுதி 2)**

தகவல் எண்ணக்கருவும் தகவல்களின் அவசியமும், தகவல் சேவைகளை ஒழுங்குபடுத்தல்: தகவல் சேவைகளும் நுட்பங்களும், தகவல் தேவைகளை நிறைவேற்றுவதில் தகவல் தொழில்சார் உத்தியோகத்தரின் பங்கு: தகவல் சேவைகள் குறித்து வாசகருடன் கலந்தாலோசித்தல், வாசகர் தகவல் தேடும் கணினி/வலைததள/தரவுத்தள வாசகர் – திரை இடைமுகங்கள், தகவல்களை மீட்டெடுப்பதற்காக பயன்மிகு தேடல் வழிமுறை உத்திகளை வகுத்தல், தேடிய தகவல்களை மதிப்பிடலும் தெரிந்தெடுத்தலும், நூலகங்களில் தகவல் கல்வியறிவு பற்றிய செயற்பாடுகள், தகவல் சேவைகள் பற்றிய ஒழுக்க நெறி அடிப்படைகள்.

**LIB 1233: நூலகங்களில் தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம்**

வரைவிலக்கணங்கள்: நூலகங்களில் தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம; (ICT), நூலகங்களில் தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப மூலோபாயங்களை அமைப்பதன் நன்மைகள், நூலக தன்னியக்கமயமாக்கல்: வரைவிலக்கணம், தேவை, நடைமுறைகளும் தேவைகளும், நூலக முகாமைத்துவ மென்பொருட்கள் பற்றிய அடிப்படை அறிவு, தகவல் வள ஈட்டல்கள், தகவல் வளங்களை வாசகருக்காக தொழிநுட்ப ரீதியாக தயார்ப்படுத்தல், இரவல் வழங்கல், பருவ இதழ் போன்ற செயற்பாடுகளை தன்னியக்கப்படுத்தல் தற்கால எண்மின்/ கணினிமய சூழலில் நூலகங்களினதும் நூலகரதும் வகிபங்கு: எண்மின் நூலகங்கள் பற்றிய அறிமுகம், எண்மின் நூலக சேவைகள்.

**LIB1243: நூலகங்கள், தகவல், மற்றும் சமூகம்**

சமூக நோக்கில் நூலகங்கள், தற்கால சமூக பின்னணியில் நூலகங்களினதும் நூலகர்களதும் வகிபங்கு, நூலகமும் மக்கள் சமூகமும்: இருவழி தொடர்பும் ஒத்துழைப்பும், பொதுக் கொள்கை தொடர்பான பிரச்சினைகளும் அதன் சமூகத் தாக்கங்களும்: பதிப்புரிமை, தணிக்கை, தகவல் பற்றிய ஒழுக்க நெறிகளும் தகவல்களை அணுகுதலும், சமூக ஊடகம் பற்றிய அறிமுகமும் சமூக ஊடகம் மூலமாக தற்கால சமூகம் பெறும் நன்மைகளும்: சமூக ஊடகங்களின் தாக்கமும் உலகமயமாதலும், நூலகங்களில் சமூக ஊடகங்களின் பிரயோகம்.

**LIB1253: பாடசாலை நூலகத்துவம்**

பாடசாலை நூலகங்களில் சேகரிப்பு அபிவிருத்தி: பாடசாலை பாடவிதானத்தை புரிந்துகொள்ளலும் பல்வகைப்பட்ட கற்போரின் தேவைகளும், பாடசாலைகளில் காணப்படும் பௌதிக மற்றும் எண்ணிம (இலத்திரனியல்) தகவல்கள் வளங்கள்: வசதிகள், இட அமைவு, வெளி, நூலக வெளியினை ஒழுங்குபடுத்துதல், பௌதிக மற்றும் எண்ணிம (இலத்திரனியல்) தகவல்களை அணுகுதல், சேர்க்கை அபிவிருத்தி முகாமைத்துவம்: கொள்கைகளும் செயன்முறைகளும், வள-பகிர்வு, கூட்டொத்துழைப்பு கற்பித்தல் மற்றும் கற்றல், வாழ்நாள் கல்வியை ஊக்குவித்தல்: நிகழ்ச்சியும் நடவடிக்கைகளும், எழுத்தறிவு மற்றும் வாசித்தல் ஊக்குவிப்பு.

**LIB 1262: நூலகவியல் மற்றும் தகவல் சேவைகள் தொடர்பான தொழில் பயில்நிலை**

தொழில் பயில்நிலையானது 90 மணித்தியாலங்களைக் கொண்ட மிகப் பயனுள்ள களப்பயிற்சி மற்றும் பிரயோகக் கற்றல் அனுபவமாகும். இத்தொழில் பயில் நிலையானது 02 திறமை மட்டங்களைக் கொண்ட ஒரு பாடநெறியாகும். இப்பாடநெறியின் போது மாணவர்கள் பட்டய நூலகர் ஒருவரின் மேற்பார்வையின் கீழ் பிரயோக பயிற்சியைப் பெறுவார். இக்களப் பயிற்சியின் பின் மாணவர்கள் மேற்கொண்ட செயற்பாடுகளையும் அவதானிப்புகளையும் உள்ளடக்கிய ஓர் அறிக்கையைச் சமர்ப்பிப்பர்.

## தொடர்புகள் பற்றிய விபரங்கள்

**Postal Address:**

Senior Assistant Registrar
Centre for Distance and Continuing Education,
University of Peradeniya
P.O. Box 43,
Old Galaha Road,
Peradeniya

| | | |
|---|---|---|
| Telephone: | General | (+94) 081 2392222, (+94) 081 2388057,<br>(+94) 081 2392218, (+94) 081 2392210 |
| Fax: | | (+94) 081 2384329, |
| Web site: | | http://www.pdn.ac.lk/cdce |

Copyright: University of Peradeniya

Graphic and Layout Design: Dr. BMMCB. Hindagolla

Translation: Mr. R. Maheswaran

Photographs: Mr. Ishan Senevirathne
Ms. V. Senavirathne

Published by: Centre for Distance and Continuing Education,
University of Peradeniya
Peradeniya

# நூலகவியல் மற்றும் தகவல் சேவைகள் டிப்ளோமா கற்கை நெறி



பேராதனைப் பல்கலைக்கழக
தொடர் தொலைக்கல்வி நிலையம்
பேராதனை.

தொலைபேசி (+94)081 2392222, (+94) 081 2388057
(+94) 0812392218,(+94)0812392210
தொலைநகல் (+94) 0812384329
இணையத்தளம் ://www.pdn.ac.lk/cdce